சுருக்கம்

பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – நெடுஞ்சாலைத்துறை தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அலகிற்கு அனுமதிக்கப்பட்ட 4 மண்டல ஆய்வகங்களைத் தவிர கூடுதலாக 4 மண்டல ஆய்வகங்கள் ஏற்படுத்தவும், ஏற்கனவே 4 மண்டல ஆய்வகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட 48 பணியிடங்களை 8 மண்டல ஆய்வகங்களுக்கு மறு பணியமர்வு செய்ய ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்(ந.ச.ஆர்1) துறை

அரசாணை (நிலை) எண்.61

நாள்: 12.04.2013

நந்தன பங்குனி 30, திருவள்ளுவராண்டு 2044

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண்.293, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 12.10.2012
2. அரசாணை (நிலை) எண்.323, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 24.12.2010
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, அவர்களின் கடித எண். நிர் 2 (1) 5130/2012 நாள் 12.12.2012.

**ஆணை:-**

மேலே, பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அலகிற்கு 673 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து சுருக்கமான விபரம் பின்வருமாறு:-

| அலுவலகம் | பொறியாளர் பணியிடங்கள் | சார்நிலை/ஆய்வகப் பணியிடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| த.பொ. அலுவலகம், த.உ(ம) ஆ. | 46 | 131 | 177 |
| 8 தரக் கட்டுப்பாடு கோட்டங்கள் மற்றும் அவைகளின் கட்டுப்பாட்டில் உள்ள உட்கோட்டங்கள் / பிரிவுகள் | 135 | 313 | 448 |
| 4 மண்டல ஆய்வகங்கள் | 16 | 32 | 48 |
| **மொத்தம்** | **197** | **476** | **673** |

2. முதன்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் நெடுஞ்சாலைத்துறையில் வட்ட அளவில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான கலவை உள்ளமைப்பு (Mix design) பணிக் கலவை சூத்திரம் (Job Mix formula) குறித்த ஆய்வுகளுக்கு தேவைப்படும் உபகரணங்களை உள்ளடக்கிய ஆய்வகம் தரக்கட்டுப்பாடு கோட்டப் பொறியாளர்(நெ) அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கவேண்டும் என்று மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், ஆணையிடப்பட்டது. ஆயினும் தர உறுதி (ம) ஆராய்ச்சி அலகில் இன்றைய நிலையில் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மட்டும் மண்டல ஆய்வகங்கள் உள்ளன எனவும், இந்த 4 மண்டல ஆய்வகங்களுக்கும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு மொத்தம் 48 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட அரசாணையினை தொடர்ந்து திருச்சி, சேலம், விழுப்புரம், திருப்பூர் ஆகிய நிரந்தர வட்ட தலைமையிடங்களில் மண்டல ஆய்வகக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எனவே புதியதாக ஆய்வகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ள தலைமையிடங்களில் மண்டல ஆய்வகங்கள் ஏற்படுத்தவேண்டியுள்ளது எனவும், இந்நிலையைக்

Scanned with OKEN Scanner

கருத்திற்கொண்டு தர உறுதி (ம) ஆராய்ச்சி அலகில் திருச்சி, சேலம், விழுப்புரம், திருப்பூர் ஆகிய இடங்களில் கூடுதலாக மண்டல ஆய்வகங்களை ஏற்படுத்தவும், அதன் காரணமாக ஏற்கனவே இயங்கும் 4 மண்டல ஆய்வகங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள 48 பணியிடங்களை (உதவிக் கோட்டப் பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் ஆய்வகப் பணியாளர்கள்) 8 மண்டல ஆய்வகங்களுக்கு மறு பகிர்மானம் செய்யவேண்டி உள்ளதாக தலைமைப் பொறியாளர் (நெ), தர உறுதி (ம) ஆராய்ச்சி அவர்கள் தெரிவித்துள்ளதாக முதன்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். இதுகுறித்து 8 மண்டல ஆய்வகங்களுக்கும் தேவைப்படும் பணியிடங்கள் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | மண்டல ஆய்வகங்–களின் தற்போதைய தலைமையிடம் | பதவி வாரியாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை (ஒவ்வொரு மண்டல ஆய்வகத்திற்கும்) | | பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட அரசாணை எண். நாள் | புதிதாக மண்டல ஆய்வகங்கள் ஏற்படுத்த வேண்டிய தலைமை – யிடங்கள் | 8 மண்டல ஆய்வகங்களுக்கும் பதவி வாரியாக தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை | | மண்டல ஆய்வகங்கள் எந்த அலுவலரின் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கும் / ஊதிய பட்டுவாடா அலுவலர் / எந்த கருவூலத்திலிருந்து ஊதியம் பெறப்பட வேண்டும். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டல ஆய்வகம் தஞ்சாவூர் | உதவிக் கோட்டப் பொறியாளர் | 2 | அரசாணை எண்.293/ நெடுஞ்சாலை (ம) சிறுதுறை–முகங்கள் (எச்.கே.3) துறை நாள் 12.10.2010 | மண்டல ஆய்வகம் திருச்சி | <u>1. தஞ்சாவூர் மண்டல ஆய்வகம்</u> | | |
| | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 2 | | | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | தலைமைப் பொறியாளர் (நெ) தர உறுதி மற்றும் ஆராய்ச்சி சென்னை-25 அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் |
| | | ஆய்வக உதவியாளர் | 4 | | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | |
| | | கள உதவியாளர் | 2 | | | ஆய்வக உதவியாளர் | 2 | |
| | | சாலைப் பணியாளர் | 2 | | | கள உதவியாளர் | 1 | |
| | | | 12 | | | சாலைப் பணியாளர் | 1 | |
| | | | | | | | 6 | |
| | | | | | | <u>2. திருச்சி மண்டல ஆய்வகம்</u> | | சம்பளம் (ம) கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-8 தலைமைப் பொறியாளர் (நெ) தர உறுதி மற்றும் ஆராய்ச்சி சென்னை-25 மூலமாக பெற்று வழங்கப்படும் |
| | | | | | | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | |
| | | | | | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | |
| | | | | | | ஆய்வக உதவியாளர் | 2 | |
| | | | | | | கள உதவியாளர் | 1 | |
| | | | | | | சாலைப் பணியாளர் | 1 | |
| | | | | | | | 6 | |

Scanned with OKEN Scanner

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | மண்டல ஆய்வகம் மதுரை | உதவிக் கோட்டப் பொறியாளர் | 2 | அரசாணை எண்.293/ நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.கே.3) துறை நாள் 12.10.2010 | மண்டல ஆய்வகம் சேலம் | 3. மதுரை மண்டல ஆய்வகம் | | |
| | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 2 | | | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | |
| | | ஆய்வக உதவியாளர் | 4 | | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | |
| | | கள உதவியாளர் | 2 | | | ஆய்வக உதவியாளர் | 2 | |
| | | சாலைப் பணியாளர் | 2 | | | கள உதவியாளர் | 1 | |
| | | | 12 | | | சாலைப் பணியாளர் | 1 | |
| | | | | | | | 6 | |
| | | | | | | 4. சேலம் மண்டல ஆய்வகம் | | |
| | | | | | | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | |
| | | | | | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | |
| | | | | | | ஆய்வக உதவியாளர் | 2 | |
| | | | | | | கள உதவியாளர் | 1 | |
| | | | | | | சாலைப் பணியாளர் | 1 | |
| | | | | | | | 6 | |
| 3 | மண்டல ஆய்வகம் திருநெல்வேலி | உதவிக் கோட்டப் பொறியாளர் | 2 | அரசாணை எண்.293/ நெ.ம.சிது (எச்.கே.3) துறை நாள் 12.10.2010 | மண்டல ஆய்வகம் விழுப்புரம் | 5. திருநெல்வேலி மண்டல ஆய்வகம் | | |
| | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 2 | | | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | |
| | | ஆய்வக உதவியாளர் | 4 | | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | |
| | | கள உதவியாளர் | 2 | | | ஆய்வக உதவியாளர் | 2 | |
| | | சாலைப் பணியாளர் | 2 | | | கள உதவியாளர் | 1 | |
| | | | 12 | | | சாலைப் பணியாளர் | 1 | |
| | | | | | | | 6 | |
| | | | | | | 6. விழுப்புரம் மண்டல ஆய்வகம் | | |
| | | | | | | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | |
| | | | | | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | |
| | | | | | | ஆய்வக உதவியாளர் | 2 | |
| | | | | | | கள உதவியாளர் | 1 | |
| | | | | | | சாலைப் பணியாளர் | 1 | |
| | | | | | | | 6 | |

Scanned with OKEN Scanner

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | மண்டல ஆய்வகம் கோயம்புத்தூர் | உதவிக் கோட்டப் பொறியாளர் | 2 | அரசாணை எண்.293/ நெடுஞ்சாலை (ம) சிறுதுறை-முகங்கள் (எச்.கே.3) துறை நாள் 12.10.2010 | மண்டல ஆய்வகம் திருப்பூர் | <u>7. கோயம்புத்தூர் மண்டல ஆய்வகம்</u> | | |
| | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 2 | | | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | |
| | | ஆய்வக உதவியாளர் | 4 | | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | |
| | | கள உதவியாளர் | 2 | | | ஆய்வக உதவியாளர் | 2 | |
| | | சாலைப் பணியாளர் | 2 | | | கள உதவியாளர் | 1 | |
| | | | 12 | | | சாலைப் பணியாளர் | 1 | |
| | | மேற்குறிப்பிட்டவாறு நான்கு மண்டல ஆய்வகங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியிடங்கள் – 48 (4x12)<br><u>**கணக்கு தலைப்பு**</u><br>3054-Roads & Bridges-80 General Research & Developments I Non-Plan-AA-Research Station (H&RW) | | | | | 6 | |
| | | | | | | <u>8. திருப்பூர் மண்டல ஆய்வகம்</u> | | மேற்குறிப்பிட்டவாறு எட்டு மண்டல ஆய்வகங்களுக்கும் ஒப்பளிப்பு கோரப்படும் பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை (8 x6) = 48 |
| | | | | | | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | |
| | | | | | | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | |
| | | | | | | ஆய்வக உதவியாளர் | 2 | |
| | | | | | | கள உதவியாளர் | 1 | |
| | | | | | | சாலைப் பணியாளர் | 1 | |
| | | | | | | | 6 | |

3. சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட எல்லைக்குட்பட்ட நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் மெட்ரோ பணிகளின் தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகளும் தலைமைப் பொறியாளர் (நெ) தர உறுதி (ம) ஆராய்ச்சி அலுவலகத்தில் உள்ள ஆய்வகங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் எனவும், அதே சமயம் திருச்சி (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட எல்லையைப் பொருத்தமட்டில் திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் 2 மண்டல ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும் எனவும் தலைமைப் பொறியாளர் (நெ) தர உறுதி (ம) ஆராய்ச்சி

Scanned with OKEN Scanner

அவர்கள் தெரிவித்துள்ளதாக முதன்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். இதுகுறித்த விபரம் பின்வருமாறு:-

| ஆய்வகத் தலைமையிடம் | எந்த கோட்டங்களின் தரக்கட்டுப்பாடு பணிகள் மேற்கொள்ளப்படும். |
|---|---|
| திருச்சி மண்டல ஆய்வகம் | அரியலூர், திருச்சி, புதுக்கோட்டை (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டப் பணிகள் திருச்சி, புதுக்கோட்டை (நெ) ந(ம)கி.சா. கோட்டப் பணிகள் |
| தஞ்சாவூர் மண்டல ஆய்வகம் | நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் (நெ) க(ம)ப கோட்டப் பணிகள் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் . கோட்டப் பணிகள் |

4. மேலும், பார்வை 2–ல் அளிக்கப்பட்ட ஆணையின் அடிப்படையில், நெடுஞ்சாலைத்துறையில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான தரக் கட்டுப்பாடு நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக, பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அலகிற்கு அனுமதிக்கப்பட்ட தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படும் 4 மண்டல ஆய்வகங்களை தவிர, கூடுதலாக திருச்சி, சேலம், விழுப்புரம், திருப்பூர் ஆகிய இடங்களில் 4 மண்டல ஆய்வகங்கள் ஏற்படுத்தவும், அதன் காரணமாக ஏற்கனவே இயங்கும் 4 மண்டல ஆய்வகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட 48 பணியிடங்களை (உதவிக் கோட்டப் பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் ஆய்வகப் பணியாளர்கள் உள்பட) 8 மண்டல ஆய்வகங்களுக்கு மறுபணியமர்வு செய்வதற்கான ஆணையினை முதன்மை இயக்குநர் அவர்கள் கோரியுள்ளார்.

5. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, அவர்களின் கருத்துரு அரசால் கவனமுடன் பரீசிலனை செய்யப்பட்டது. முதன்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை ஏற்று, தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அலகிற்கு அனுமதிக்கப்பட்ட தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படும் 4 மண்டல ஆய்வகங்களை தவிர, கூடுதலாக திருச்சி, சேலம், விழுப்புரம், திருப்பூர் ஆகிய இடங்களில் 4 மண்டல ஆய்வகங்கள் ஏற்படுத்தவும், அதன் காரணமாக ஏற்கனவே இயங்கும் 4 மண்டல ஆய்வகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட 48 பணியிடங்களை (உதவிக் கோட்டப் பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் ஆய்வகப் பணியாளர்கள் உள்பட) மேலே பத்தி 2ல் காணும் பட்டியலின் அடிப்படையில் 8 மண்டல ஆய்வகங்களுக்கு மறு பணியமர்வு செய்வதற்கு அரசு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

6. ஏற்கனவே, புதியதாக மண்டல ஆய்வகங்கள் தோற்றுவிக்கும் பொருட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடங்களில் அரசால் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டு இயங்கிவரும் 4 மண்டல ஆய்வகங்களில் பணியாற்றும் மொத்தம் 48 பணியாளர்களை நெடுஞ்சாலைத் துறையில் புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள நான்கு மண்டல ஆய்வகங்களுக்கும் சேர்த்து சரிசமமாக மொத்தம் எட்டு மண்டல ஆய்வகங்களுக்கும் பகிர்ந்தளித்து வழங்குவதற்கு இந்நேர்வில் கூடுதல் செலவினம் /நிதி ஒப்பளிப்பு ஏதும் இல்லை என்பதை உறுதி செய்யுமாறு முதன்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

Scanned with OKEN Scanner

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் (அ.சா.கு. எண். 16699/பொ.ப.I/2013 நாள்08.04.2013) வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

டாக்டர். நிரஞ்சன் மார்டி
முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், தரஉறுதி (ம) ஆராய்ச்சி, சென்னை –25.
தலைமைப் பொறியாளர், (கட்டுமானம் (மற்றும்) பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, சென்னை –5.
தலைமைப் பொறியாளர், திட்டங்கள், நெடுஞ்சாலைத் துறை, சென்னை –15.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
கருவூல அலுவலர், தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், விழுப்புரம், சேலம், மதுரை, திருச்சி.

நகல்
நிதி (பொ.ப–I ) துறை, சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
உதிரி நகல் / இருப்புக் கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Scanned with OKEN Scanner